

# ஜாலான் மஸ்ஜித் இந்தியாவிலுள்ள வணிகப் பகுதிகளை மேம்படுத்துவீர்

## - பிரதமர் உத்தரவு

கோலாலம்பூர், ஜன.11-

தலைநகர் ஜாலான் மஸ்ஜித் இந்தியாவில் உள்ள பாழடைந்த வணிகப் பகுதிகளை மேம்படுத்த வேண்டும் என்று கோலாலம்பூர் மாநகர் மன்றத்திற்கு பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் நேற்று உத்தரவிட்டார்.

அங்குள்ள கடைகள் அனைத்தும் மிகவும் பாழடைந்த கட்டடங்களாக உள்ளன. தலைநகருக்கு அதிகமாக சுற்றுப்பயணிகளைக் கவருவதற்கு அப்பகுதி அவசியம் மேம்படுத் தப்பட வேண்டும் என அவர் சொன்னார்.

சில கடைகள் மிகவும் மோசமான அளவில் சேதமடைந்துள்ளன. எனவே, அதிகமான சுற்றுப்பயணிகள் வருகை புரியும் அப்பகுதியை மேம்படுத்தும் பணியில் கோலாலம்பூர் மாநகர் மன்றத்தையும் கூட்டரசுப் பிரதேச அமைச்சையும் தாம் கேட்டுக் கொள்வதாக அவர் சொன்னார்.

நேற்று வெள்ளிக்கிழமை தொழுகைக்குப் பின் ஜாலான் மஸ்ஜித் இந்தியா சுற்றுப்பகுதி களை அவர் நேரில் பார்வையிட்ட பின்னர் செய்தியாளர்களிடம் இவ்வாறு தெரிவித்தார். துரித வரைவுத் திட்டத்தின் வழி அப்பகுதியை விரைவான முறையில் மேம்படுத்த முடியும். பொதுமக்களுக்கும் அங்குள்ள வியாபாரிகளுக்கும் பல்வேறு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் அப்பகுதி மேம்படுத்தப்பட வேண்டும்.

மஸ்ஜிட் இந்திய பகுதியை பிரதமர் சுமார் 15 நிமிடங்கள் வரை சுற்றிப் பார்த்தார்.

முன்னதாக தலைநகர் மஸ்ஜித் இந்தியா பள்ளிவாசலில் நடைபெற்ற வெள்ளிக்கிழமை தொழுகையில் பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் கலந்து கொண்டார்.

பிரதமரின் வருகையை முன்னிட்டு பள்ளிவாசல் தலைவர் ஏவிஎம் ஹாஜா முஹிடின், துணைத் தலைவர் டத்தோ ஹாஜி இஷாமுடின் டான்ஸ்ரீ உபைதுல்லா, தலைமை யிலான நிர்வாகக் குழுவினர் உரிய ஏற்பாடு களை செய்திருந்தனர்.

பிரதமரைக் காண நேற்று நண்பகல் 12 மணி முதல் மக்கள் அப்பகுதியில் கூட தொடங்கினர். இதனால் அப்பகுதியில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.